## சஞ்சீவனி மருத்துவமனையில்

# இதய நோய்களுக்கு அறுவை சிகிச்சையின்றி மருத்துவம்

## சித்த மருத்துவர் ஜெகதீஸ்வரன் தகவல்

திருவனந்தபுரம், ஏப்.12-

நெய்யாற்றின்கரை பூழிக்குன்னுவில் சஞ்சீவனி மருத்துவ மனை உள்ளது. இங்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவரான சஞ்சீவனி மருத்துவமனை யின் தலைவரும், மூத்த மருத்துவருமான டாக்டர். ஜெக தீஸ்வரன் கூறியதாவது:-

சஞ்சீவனி மருத்துவமனை இதய மருத்துவ சிகிச்சையில் 9-ம் ஆண்டை நோக்கிய பயணம் செய்கிறது. இந்தியாவில் 1990 கால கட்டத்தில் இதய நோய் பாதித்தவர்களில் 15 சதவீ தம் பேர் மரணம் அடைந்தனர். ஆனால் தற்போது மரண விகிதம் 25 சதவீதமாக உயர்ந்து உள்ளது. இந்த சூழலில், புற்று நோய் மருத்துவத்திலும், இதய நோய் சிகிச்சையிலும் வெற்றி கண்ட சஞ்சீவனி மருத்துவமனை மற்றும் மூலிகை புற்றுநோய் மையம், இப்போது இருதய சிகிச்சைக்காக, நவீன கண்டுபி டிப்பின் மூலம், பாலின பாகுபாடு இன்றி வலி, அறுவை சிகிச்சை, பக்கவிளைவுகள் இல்லாத சிகிச்சை அளிக்கிறது.

இந்த மருத்துவமனையில் இதய சிகிச்சைக்காக பிரிவில் இதயம், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல், பாங்கிரியாஸ் ஆகிய வற்றை பாதுகாக்கும் சிகிச்சையும், ஆரம்ப நிலை புற்றுநோய், தைராய்டு, குழந்தையின்மை, வெரிக்கோஸ், சொரியாசிஸ், கருப்பை நோய்கள், மன நல பிரச்சினைகள், மதுமேகம், வாத நோய்கள், முதுகெலும்பு நோய்கள் பல வகை கழலை, கட்டி கள் போன்ற அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளிக் கப்படுகிறது. மேலும் கொரோனாவுக்கு பிறகு ஏற்படும் நுரை யீரல் நோய்களுக்கு சிறப்பு சிகிச்சையளிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

மேலும், சென்னையை சேர்ந்த டி.சிவநாதன் கூறும்போது, அவருடைய 78 வயதான தாயாரின் இதயத்தில் அடைப்புகள் இருந்த நிலையில் பைபாஸ் அறுவை சிகிச்சை இன்றி சஞ்சீ வனி மருத்துவமனையில் பெற்ற சிகிச்சையால் இயல்பு நிலைக்கு திரும்பியதாக கூறினார்.

Scanned with OKEN Scanner

Scanned with OKEN Scanner